வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 2359 /அ2/2022 நாள் 14.07.2022

| | |
|---|---|
| பொருள் | மெட்ரிக் பள்ளிகள் – கட்டண நிர்ணயக்குழு – கல்விக் கட்டணம் நிர்ணயம் செய்த ஆணை நகல் கோருதல் – சார்பாக |
| பார்வை | தனி அலுவலர், தனியார் பள்ளிகள் கட்டண நிர்ணயகுழு அவர்களின் கடித ந.க.எண் 103/தபகநிகு/2022 நாள் 13.07.2022 |

பார்வையில் காணும் கடிதத்தின் படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து மெட்ரிக்/ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளிகளில் தனியார் பள்ளிகள் கல்வி கட்டணம் நிர்ணயம் செய்யாத பள்ளிகள் விவரம் கோரி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரி குழுவிற்கு கடிதம் பெறப்பட்ட வண்ணம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே வேலூர் மாவட்டம் சார்ந்து தங்கள் பள்ளிகளில் **2022 -2023 ஆம் கல்வியாண்டிற்குரிய ( Fee committee order ) ஆணை அல்லது தங்கள் பள்ளிக்கு கடைசியாக பெறப்பட்ட ஆணையின் நகல் ஒன்றினை( முழு நகலுடன் ) 20.07.2022 பிற்பகல் 5 மணிக்குள் இவ்வலுவலக அ2 பிரிவில் ஒப்படைக்குமாறு அனைத்து மெட்ரிக் / மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்**.

**குறிப்பு – இந்நாள் வரை கட்டணம் நிர்ணயம் செய்யாத அங்கீகரிக்கப்பட்ட மெட்ரிக் பள்ளிகள் அதற்குரிய உரிய விளக்கத்தினை தவறாமல் ஒப்படைக்கப்பட வேண்டும்.**

**மேலும் மேற்காண் தேதிக்குள் ( Fee committee order ) சமர்பிக்காத பள்ளிகள் இந்நாள் வரை கட்டணம் நிர்ணயம் செய்யாத பள்ளிகள் என கருதப்படும்.**

எனவே மேற்காண் தகவல் தொடர்பாக தனி கவனம் செலுத்தி உடன் நடவடிக்கை மேற்கொள்ள மெட்ரிக் பள்ளிகள் முதல்வர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.

//ஒப்பம் //

// க.முனுசாமி //

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்.

**பெறுநர்**

அனைத்து மெட்ரிக்/ மெட்ரிக் மேல்நிலை பள்ளிகள்

வேலூர் மாவட்டம்.